DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT JUDGE, ERODE.
**O.S.No.** 520/2023

Deposition of Witness : PW. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அம்சவேணி | க/பெ. | : | செல்வராஜ் |
| கிராமம் | : | தோட்டாணிசத்திரம் | தாலுகா | : | பெருந்துறை |
| தொழில் | : | இல்லத்தரசி | வயது | : | 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 30-06-2026.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி (சாட்சி வழக்கறிஞரால் அடையாளம் காட்டப்பட்டார்)

(வழக்கிற்கு தேவையான மற்றும் சம்பந்தப்பட்ட சங்கதிகள் குறித்து மட்டும் குறுக்கு விசாரணை செய்யுமாறு கற்றறிந்த வழக்கறிஞருக்கு அறிவுறுத்தப்பட்டது.)

தாவா 3வது இலக்க சொத்தில் ரீ.சர்வே எண். 733/9ல் எனது தகப்பனார் செங்கோட கவுண்டருக்குகிரைய வகையில் ஒரு ஏக்கர் 32 முக்கால் சென்ட் பூமியும் மீதமுள்ள 75 சென்ட் பூமி எனது தாயார் 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் தவறு. எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் வழக்கு சொத்து விவரத்தில் காண்பித்துள்ளதால் வழக்கு சொத்து விவரம் தவறானது என்றால் தவறு. செங்கோட கவுண்டர் அவரது மகனான இரண்டாம் பிரதிவாதியின் பராமரிப்பில் இருந்து வந்தார் என்றும் அதனால் அவர் மீது இருந்த அன்பினாலும் பாசத்தினாலும் 18-09-2008 தேதி அன்று பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் எழுதி வைத்துள்ளார் என்றால் தவறு. செங்கோட கவுண்டர் 22-01-2015 தேதியில் இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். செங்கோடகவுண்டர் இறப்பிற்கு பின்னிட்டு அவர் எழுதி வைத்த உயிர் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், இரண்டாம் பிரதிவாதி சொத்துக்கள் அனைத்தையும் அடைந்து அனுபவித்து வருகிறார் என்றும் சொன்னால் தவறு. எனது தாயார் இரண்டாம் பிரதிவாதியின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து வந்ததால் எனது தாயார் இரண்டாம் பிரதிவாதி மீது இருந்த அன்பினாலும் பாசத்தினாலும் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து 21-08- 2019 ஆம் தேதியில் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் தவறு. எனது தாயார் சின்னம்மாள் 11-02-2021-ம் தேதியில் இறந்து போய்விட்டார் என்றால்

V SURESH Digitally signed by V SURESH
Date: 2026.06.30 17:23:10
+0530

சரிதான். எனது தாயாரின் இறப்பிற்கு பின்னிட்டு அவர் எழுதி வைத்த உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், இரண்டாம் பிரதிவாதி சொத்துக்களை அடைந்து முழு உரிமையாளராக அனுபவித்து வருகிறார் என்றும் சொன்னால் தவறு. எனது தகப்பனார் செங்கோட கவுண்டர் மற்றும் எனது தாயார் சின்னம்மாள் ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த உயில்கள் உண்மையானவைகள் என்றும், அவைகள் சட்டப்படி செல்லதக்கவைகள் என்றும் சொன்னால் தவறு. அந்த இரண்டு உயிர்களின் அடிப்படையில் சொத்துக்களின் வருவாய் ஆவணங்களின் இரண்டாம் பிரதிவாதி தனது பெயருக்கு மாற்றம் செய்து வரிவகையறாக்களை செலுத்தி முழு உரிமையாளராக அனுபவித்து வருகிறார் என்றால் தவறு. தாவா சொத்துக்களுக்கு நான் வரி செலுத்தி வருகிறேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும்.தாவா சொத்துக்களில் நான் கூட்டு அனுபவத்தில் இருந்ததில்லை என்றும், சொத்துக்களுக்கு வரி செலுத்தியதில்லை என்றும் சொன்னால் தவறு. அவ்வாறு நான் வரி ஏதாவது செலுத்தி இருந்தால் அதற்கான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் தவறு. தாவா சொத்துக்கள் இரண்டாம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் தவறு. இரண்டாம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் முழு உரிமையாளர் என்பதால் வாதிகளுக்கு மூன்றாம் பிரதிவாதிக்கும் தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் தவறு . அதனால் வாதிகள் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்ததக்கது என்றும் சொன்னால் தவறு.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.06.30 17:23:16 +0530

II Addl. District Judge, Erode.